நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 24.03.2023

**சாதரணக்கூட்டம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2023**ம் வருடம் **மார்ச்** மாதம் 28 **ம்** தேதி **செவ்வாய் கிழமை காலை 10.30** மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதாரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**<u>பொருள் எண்.1</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு 2023-24 ம் ஆண்டிற்கு அனைத்து பிரிவிற்கும் தேவையான நிலையான பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள், நகராட்சி ஈப்பு வாகனங்களின் Log Book. Part I., Part II மற்றும் பொது சுகாதாரம் வாகனங்களுக்கான MF 200 போன்ற முக்கியமான பதிவேடுகள் போன்ற பொருட்கள் கூட்டுறவு அச்சகங்கள் அல்லது அவசர அவசியம் கருதி உள்ளூர் வினியோகஸ்தர்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று கூட்டுறவு அச்சகத்தின் விலைக்கு மிகாமல் வாங்குவதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண் 334/23/சி1

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி செலவினத்தை 2023-24 ம் நிதியாண்டில், நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 245 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.2</u>**

அம்பாசமுத்திரம் வட்டம், விக்கிரமசிங்கபுரம் பகுதி 2 கிராமம, புல எண் 147 விஸ்தீரணம் 3.67.50 ஹெக்டேர் அரசு புறம்போக்கு (கல்லாங்குத்து)தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தில் 200 ச.மீ (0.02.00 ஹெக்டேர்) இடத்தினை மட்டும் தகவல் தொடர்பு கோபுரம் அமைக்கும் வகைக்கு பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக, விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் தீர்மான நிறைவேற்றி தரக்கோரி அம்பாசமுத்திரம் வருவாய் வட்டாச்சியார் அவர்களின் கடிதம் ந.க.ஆ1/681/2023 நாள் 24.02.2023 ன் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 246 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 21 வார்டு பகுதிகளில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான கைபம்புகள் (அடிபம்புகள்) மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட அடிபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக 2023-24 ம் ஆண்டுக் க பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2.60/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும்,பணி மேற்கொள்ள ஓப்பந்தப்புள்ளி கோரவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் (2023-24) இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் அத்தியாவசியம் மற்றும் அவசியம் கருதி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.60/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி 2023-24 ல் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்,

**தீர்மான எண் : 247 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளுக்கும் இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்திற்காக இந்நகராட்சி மூலம் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு, அதனை பராமரிப்பும் செய்து வருகிறது. மேற்கண்ட பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு 2023-24 ம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்டநிதி 2023-24 இருந்து செலவினம் செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக, பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி 2023-24 ல் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்,

**தீர்மான எண் : 248 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளுக்கும் இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்திற்காக இந்நகராட்சி மூலம் குடிநீர் பம்பிங் மெயின் குழாய்கள் பதிக்கப்பட்டு, அதனை பராமரிப்பும் செய்து வருகிறது. மேற்கண்ட பம்பிங் மெயின் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு 2023-24 ம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்டநிதி 2023-24 இருந்து செலவினம் செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக, பம்பிங் மெயின் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி 2023-24 ல் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 249 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும், இந்நகராட்சி மூலம் சின்டெக்ஸ் தொட்டி மற்றும் கழிப்பறைகள் அமைக்கப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட சின்டெக்ஸ் தொட்டி மின் மோட்டர் மற்றும் நகராட்சி கழிப்பறைகளில் உள்ள மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும்

பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொது மக்களுக்கு பயன்படும் வகையில் 2023-24 ஆம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்டநிதி 2023-24 இருந்து செலவினம் செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் அத்தியாவசியம் மற்றும் அவசியம் கருதி, சின்டெக்ஸ் தொட்டி மின் மோட்டர் மற்றும் நகராட்சி கழிப்பறைகளில் உள்ள மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் சரி செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி 2023-24 ல் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 250 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட பொதிகையடி தூய நீரேற்று நிலையம், கொட்டாரம் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, ஓட்டன்குளம் தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி மற்றும் வம்பளந்தான்பாறை தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி களில் இருந்து இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்கள் நலன் கருதி , தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில் Liquid Chlorination Plant மூலம் கோளரின் கலக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட Liquid Chlorination Plant க்கு 2023-24 ஆம் ஆண்டுக்கு Liquid Chlorine கொள்முதல் செய் இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி 2023-24 ல் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**அலுவலகக்குறிப்பு**

பொது மக்கள் நலன் கருதி , தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில் Liquid Chlorination Plant மூலம் கோளரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி 2023-24 ல் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 251 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண் 8**

விக்கிரமசிங்கபுரம் அலுவலக பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இணைப்புகள் மற்றும், வசூல் மையத்திற்கு உரிய விபின் இணைப்பு ஆகியவைகளுக்கு 2023 -24 ம் ஆண்டு தொலைப்பேசி கட்டணங்களை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 252 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண் 9**

விக்கிரமசிங்கபுரம் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்படும் உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்களுக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.35000/- த்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 253 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண் 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான பலசரக்கு, காய்கறி, பால், சிலிண்டர், மற்றும் பணியாளர்களின் ஊதியம் மாதம் ஒன்றுக்கு உத்தேசமாக ரூ. 2.50 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருது செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 254 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண் 11**

2023-24 ம் ஆண்டு விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிப்புரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர், ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் தையற்கூலி வழங்க ஆகும் செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருது செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 255 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண் 12**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 2023-24 ம் ஆண்டு தேவையான தளவாட சாமன்கள், கிருமி நாசினி, கொசு மருந்து, பீளிச்சிங் பவுடர்,சுன்னாம்பு பவுடர் மற்றும் அத்தியவசிய பொருட்கள் கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 256 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில் , விதி எண் 110 ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு நாள் 07.05.2022 ன் படி, மாநகராட்சிகள், நகராட்சிகள் ஊரக/கிராம ஊராட்சிகள், மற்றும் மலைபகுதிகளில் செயல்படும் அரசு தொடக்கப்பள்ளி (1 முதல் 5ம் வகுப்பு வரை) மாணவ மாணவியருக்கு, காலை உணவு வழங்குவதற்கான திட்டத்தினை செயல்படுத்திட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.அதனை தொடர்ந்து சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 17404/2022/எம்-1 நாள் 10.03.2023 ல் 30.01.2023 அன்று தலைமை செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளப்படி, காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் விரிவுபடுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டு, இத்திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக ஒருங்கிணைந்த சமயற்கூடம் அமைக்கும் பொருட்டு, கட்டிடம் அல்லது காலியிடம் கண்டறியப்பட்டு, அதில் ஒருங்கிணைந்த சமயற்கூடம் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட விவரபடியான அரசு பள்ளிகள் செயல்பட்டுவருகிறது. அதில் சுமார் 199 குழந்தைகள் (வகுப்பு 1 முதல் 5 வரை) பயில்று வருகின்றனர்

| வ.எண் | பள்ளியின் பெயர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | பஞ்சாயத்து யூனியன் நடுநிலை பள்ளி, சன்னதி தெரு | 34 | 42 | 76 |
| 2 | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, அனவன்குடியிருப்பு | 30 | 23 | 53 |
| 3 | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, அய்யனார்குளம் | 27 | 10 | 37 |
| 4 | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, காரையார் | 7 | 4 | 11 |
| 5 | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, சேர்வலார் | 4 | 6 | 10 |
| 6 | பஞ்சாயத்து யூனியன் நடுநிலை பள்ளி, லோயர் டேம் | 9 | 3 | 12 |
| | மொத்தம் | 111 | 88 | 199 |

மேற்கண்ட 6 பள்ளிகளில், முதல் 3 பள்ளிகள் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகரபகுதிக்குள் அமையப்பெற்றுள்ளது. மேற்கண்ட பள்ளிகளுக்கு ஒருங்கிணைந்த சமயற்கூடம் அமைக்கும் பொருட்டு இந்நகராட்சி பகுதி வார்டு எண் 2 அய்யனார்குளம் , விக்கிரமசிங்கபுரம் வருவாய் கிராமம் எண் 1 சர்வே புல எண் 414 ல் உள்ள தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தினை தேர்வு செய்து சமற்சகூடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற வடிவமைப்பின் அடிப்படையில் சமையற் கூடம் அமைக்க தயார் செய்யபட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு

மேலும் மீதமுள்ள 3 பள்ளிகள் இந்நகராட்சி எல்கைக்குள் உள்ள வனப்பகுதிகளான காரையார் மற்றும் சேர்வலார் பகுதியில் அமையப்பெற்றுள்ளது. மேற்கண்ட பள்ளிகளுக்கான காலை உணவினை நகர் பகுதியில் அமையப்பெறும் சமயற்கூடத்தில் இருந்து எடுத்து சென்றால், திட்டத்தின் வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ள காலை 7.30 மணிக்குள் உணவினை கொண்டு செல்ல இயலாது. எனவே உரிய கால அவகாசத்திற்குள் கொண்டு செல்ல வேண்டும் என்பதால், காரையார் மற்றும் சேர்வலார் பகுதிக்கு செல்வதற்கு ஏதுவாக, நடுநிலையான இடம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது. வனத்துறையினர் மூலம் இடம் தேர்வு செய்யப்பட்ட பின் மேற்கண்ட பகுதியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேலும் ஒரு ஒருங்கிணைந்து சமையற்கூடம் 1 அமைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு

மேலும் மேற்கண்ட திட்டத்தின் கீழ் உணவு தயாரித்தல் மற்றும் அதனை அனைத்து பள்ளிகளுக்கும் கொண்டு செல்லுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரி உரிய சுய உதவிக்குழுக்களோ, தனியார் நிறுவனமோ அல்லது, பகுதி அளவிலான கூட்டமைப்பினை தேர்ந்தெடுக்கும் பணி மேற்கொள்ளவும், இத்திட்டத்திற்கான சமையற் கூடம் கட்டுமான செலவினம், அதற்கான பாத்திரங்கள்மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யவதற்கான செலவினங்கள் மற்றும் உணவு தயாரித்தல் மற்றும் அதனை விநியோகம் செய்தல் பணிக்கான செலவினங்களை , இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் செய்யதிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

காலை சிற்றுண்டி வழங்கும் திட்டமானது, தமிழ்நாடு மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்பு திட்டம் என்பதாலும், அத்திட்டத்தினை எவ்வித தொய்வின்றி செயல் படுத்திட வேண்டும் என்பதாலும், இத்திட்டத்திற்கான அனைத்து செலவினங்களயும் இந்நகராட்சி பொது நிதி 2023-24 ல் இருந்து செலவினம் மேற்கொள்ளவும், திட்டத்திற்கென நிதி ஓதுக்கீடு பெறப்பட்டால் அதனை பொது நிதியில் ஈடு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 257 / தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டம் என்பதால், திட்டத்திற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும், திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு பெறப்பட்டால் , பொது நிதியில் ஈடு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் 2023-24 ஆம் ஆண்டிற்க்கான உத்தேச நிதிநிலை அறிக்கை (வருவாய் மற்றும் மூல தன நிதி மற்றும் குடிநீர் நிதி) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.,

**தீர்மான எண் : 258 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

1920-ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்டநகராட்சிகளின் V சட்டத்தின் பிரிவுகள் 175,176,183,197,199,200,201,204,207,208,249 மற்றும் 250 ஆகியவற்றின் கீழ் கட்டிட உரிமங்கள், உரிம ஆணைகள் மற்றும் அனுமதிகள் மீதான கட்டணங்கள் நகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு திருத்தப்பட்ட 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 321(2)ன் படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.1) துறை அரசாணை (நிலை) எண்.18, நாள்.04.02.2019 தமிழ்நாடு அரசிதழ் எண்.43. நாள்.04.02.2019 ஆகியவற்றில் தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ளதில் 04.02.2019 முதல் கட்டிட உரிமம் அனுமதி காலமான 3 ஆண்டுகள் என்பதை 5 ஆண்டுகள் என மாறுதல் செய்துள்ளதால் திருத்திய கட்டண விகிதங்கள் நடைமுறைப்படுத்திட வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாலும் நகராட்சியில் நகரமைப்பு கட்டண விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டு 10 வருடங்கள் ஆகியுள்ளதாலும் கீழ்க்கண்டவாறு திருத்தி நிர்ணயம் செய்யலாம். இந்நகர் மன்ற தீர்மானம் எண்.335 , நாள். 09.01.2013ல் சில இனங்கள் விடுபட்டுள்ளதாலும் தற்போது கீழ்க்கண்டவாறு திருத்திய கட்டிட உரிமக்கட்டணம் 01.04.2023 முதல் வசூல் செய்ய நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற அனுமதிக்கு

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ன் பிரிவு | கட்டிட உரிமங்களின் விவரங்கள் | தற்போது நகராட்சியில் வசூலிக்கப்படும் கட்டிட உரிமங்களின் கட்டண விவரம் | | | திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமங்களின் கட்டண விபரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அளவு | காலம் | தொகை ரூ. | அளவு | காலம் | தொகை ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 175,176, 177 | (1) தனியார் நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற அனுமதி கட்டணம் (குடியிருப்பிற்கு) | - | - | - | ஒரு ஏக்கர் மற்றும் அதன் பாகம் | ஒருமுறை | 5,000.00 |
| | | (2) தனியார் நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற அனுமதி கட்டணம் (குடியிருப்பு அல்லாத இனங்களுக்கு) | - | - | - | ஒரு ஏக்கர் மற்றும் அதன் பாகம் | ஒருமுறை | 10,000.00 |
| 2 | 197(1) அ) | மனை அங்கீகாரம் வழங்க | 200 சதுர மீட்டர் வரை | ஒரு முறை | 200.00 | 200 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒருமுறை | 500.00 |
| | | | 201 சதுர மீட்டர் முதல் 400 சதுர மீட்டர் வரை | ஒரு முறை | 300.00 | 201 சதுர மீட்டர் முதல் 400 சதுர மீட்டர் வரை | ஒருமுறை | 750.00 |
| | | | 401 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | 400.00 | 401 சதுர மீட்டர் முதல் 1000 சதுர மீட்டர் வரை | ஒருமுறை | 1000.00 |
| 4 | 197,207,215 | (1) மட்டப்பா கட்டிடம், கான்கிரீட் கூரை கட்டிடம், புதியதாக கட்டுதல், இடித்து திரும்பக் கட்டுதல், கூடுதல் கட்டுதல், மாறுதல் செய்தல் (கட்டுமானம் ஒரு பகுதி/ஒரு பகுதி ஆஸ்பெஸ்டாஸ் | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தகடு/தகரக் கட்டடமாகவும், ஒரு பகுதி மட்டப்பா கான்கீரிட் கூரை கட்டடமாகவும் இருப்பின் முழு மட்டப்பா கட்டடத்திற்குரிய கட்டண விகிதங்கள் அனுசரிக்கப்பட வேண்டும். | | | | | | |
| | | **குடியிருப்புகட்டிடங்களுக்கு** | | | | | | |
| | | (அ) தரைகீழ் தளம் மற்றும் தரை தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 100 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 400.00 |
| | | (ஆ) முதல் தள கட்டிடம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 400 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 600.00 |
| | | (இ) இரண்டாம் தள கட்டிடம் அதற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 500 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 800.00 |
| | | **குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு – 75 சதவீதம் கூடுதல் கட்டணம் ஐந்தாண்டுகளுக்கு** | | | | | | |
| 5 | | திட்ட அனுமதி, கட்டிட அனுமதி புதுப்பிக்க (அனுமதி காலத்திற்குள்) Sec 14 of T.NCD & B.R. 2019 | - | - | - | ஒருமுறை மட்டும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதிக் கட்டணத்தில் 100 சதவீதம் |
| 6 | 197 | (அ) பழைய கட்டிடங்களை இடித்து அகற்றுவதற்கு | - | - | - | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஒருமுறை | 50.00 |
| | | (ஆ) தெரு ஓரங்களில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் கட்டிட கட்டுமான பொருட்கள் சேமித்து வைப்பதற்கு | ஒருமுறை | மூன்று ஆண்டு காலத்திற்கு | உரிமை யாணை தொகையில் 75 சதவீதம் | - | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிட அனுமதி கட்டணத் தொகையில் 100 சதவீதம் |
| 7 | 183 (2) | (அ)வேணல் பந்தல் அமைக்க | - | - | - | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மார்ச் முதல் ஜீன் முடிய | 200.00 |
| | | (ஆ) யாதொரு பொது தெருவிலே வேறு எந்த இடத்திலோ திருமணப்பந்தல் போன்ற தற்காலிக பந்தல் அமைக்க | - | - | - | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | 7 நாட்கள் | 200.00 |
| | | (இ) கோயில் உற்சவம் அல்லது மத சம்மந்தமான வைபவங்கள் நடக்கும் காலங்களில் தற்காலிக பந்தல் அமைக்க | | | | - | - | இலவசம் |
| 8 | 197 மற்றும் 207 | பொதுமக்கள் கூடும் சர்க்கஸ், சினிமா, நாடகம், கேளிக்கைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்க அனுமதி வழங்க (எளிதில் தீப்பிடிக்காத பொருட்களினால்) | ஒருமுறை | மூன்று ஆண்டு காலத்திற்கு | 10000 | ஒருமுறை | 1 மாதம் | 20000.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 197, 201, 215 | (1) கழிப்பறை கட்ட | ஒவ்வொன்றுக் கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 400.00 | ஒவ்வொன்றுக் கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 500.00 |
| | | (2) குளியலறை கட்ட | | | | ஒவ்வொன்றுக் கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 500.00 |
| | | (3)குளியலறையுடன் கூடிய கழிப்பறை கட்ட | | | | ஒவ்வொன்றுக் கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 1000.00 |
| | | (4) நச்சுத்தடை தொட்டி கட்ட (செப்டிக் டேங்க்) | ஒவ்வொன்றுக் கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 400.00 | ஒவ்வொன்றுக் கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 600.00 |
| | | (5) சுற்றுச்சுவர் 2 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டுவதற்கு | | | | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| | | (6) மாடிப்படி அமைக்க | - | - | - | ஒவ்வொரு தளத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| 10 | 204 மற்றும் 213 | 1. கட்டிட அனுமதி வரைபடம் உண்மை நகல் வழங்க | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 200.00 | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 300.00 |
| | | 2கட்டிட அனுமதி உத்தரவு உண்மை நகல் வழங்க | - | - | - | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 200.00 |
| | | 3மனைப்பிரிவு அனுமதி வரைபடம், முழுமைத் திட்ட வரைபடம், விரிவு அபிவிருத்தி திட்ட வரைபடம் நகல் வழங்குவதற்கு | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 600.00 | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 2000.00 |
| | | 4. நகர வரைபட நகல் வழங்க: சிறியது / பெரியது | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 500 | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 500.00 A2 Size<br>400.00 A3 Size |
| | | 5நில உபயோக சான்று வழங்க | - | - | - | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 500.00 |
| 11 | 186 | 1.பதிவு பெற்ற தொழில் வல்லுநர் (Registered Professionals)அனுமதி வழங்க மற்றும் புதுப்பிக்க Part V Section 23 (b) (c) | - | - | | ஒருவருக்கு | ஐந்து ஆண்டிற்கு | 5000.00 |
| | | 2. பதிவு பெற்ற தொழில் வல்லுநர் (Registered Professionals)அனுமதி வழங்குவதற்கு முன் வைப்புத் தொகை | - | - | - | ஒருமுறை | - | 5000.00 |
| | | 3.முன் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு | ஒருமுறை | மூன்று ஆண்டுகள் | உரிமையா னத் தொகையில் 50 சதவீதம் | ஒருமுறை | ஐந்து ஆண்டுகள் | உரிமையானத் தொகையில் 100 சதவீதம் |
| 12 | 215(எ) | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க வைப்புத் தொகை (கட்டமைப்பு அமைக்கப்பட்ட விபரத்தினை அலுவலகத்தில் சமர்ப்பித்தப்பின் வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படும்) | - | - | - | □□□□□□□ | - | 2000.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | | கட்டிட அனுமதி விளம்பர பலகை வைப்புத் தொகை | ஒருமுறை | ஐந்து ஆண்டுகள் | 12.0 மீட்டர் உயரம் வரை உள்ள குடியிருப்பு கட்டிடம் | ஒருமுறை | ஐந்து ஆண்டுகள் | 1500.00 |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட திருத்திய கட்டிட அனுமதி கட்டணங்களை 01.04.2023 முதல் வசூல் செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 259 / மன்றப்பொருளில் கண்ட திருத்திய கட்டிட அனுமதி கட்டணங்களை 01.04.2023 முதல் வசூல் செய்திட மன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.16**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 21 வார்டு பகுதிகளிலும் உள்ள சின்டெக்ஸ் தொட்டியில், விளம்பர பதாகைகள், நோட்டீஸ்கள் ஓட்டப்படுவதால், சின்டெக்ஸ் தொட்டிகள் அனைத்தும், சுத்தம் செய்யப்படாமல், பராமரிப்பின்றி காணப்படுகிறது. எனவே மேற்கண்ட சின்டெக்ஸ் தொட்டிகளில் ஒட்டப்பட்டுள்ள விளம்பர போஸ்டர்கள் மற்றும் நோட்டீஸ்களை சுத்தம் செய்து விட்டு, நகராட்சி மூலம் வர்ணம் பூசுவதற்கும், அதற்கானசெலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

நகராட்சிக்கு சொந்தமான சின்டெக்ஸ் தொட்டிகளில் உள்ள விளம்பர போஸ்டர்கள் மற்றும் நோட்டீஸ்களை சுத்தம் செய்து வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 260 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.17**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் , கீழ்க்கண்ட பணிகள் செய்து முடிக்க 21.03.2023 ம் தேதி வரப்பெற்ற இருஒப்பந்தப்புள்ளிகளின் ஓப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஓப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி டாணா மின்வாரிய அலுவலகம், அனவன்குடியிருப்பு, கோட்டைவிளைப்பட்டி, சங்கரபாண்டியபுரம், காமராஜர் தெரு, ஞானியார் தோப்பு மற்றும் மேலக்கொட்டாரம் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் மேம்பாடு செய்யும் பணி மதிப்பீடு ரூ. 7.90/- இலட்சம் | திரு. கே.ராஜா<br>காளிபார்விளை<br>டாணா விக்கிரமசிங்கபுரம் | 0.18 %<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திரு. வெங்கட் பெருமாள் சுப்பையா<br>ஒப்பந்தகாரர்<br>திருமாள்நகர், பெருமாள்புரம் | 0.95 %<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளில்., குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஓப்பந்தக்காரர் திரு. கே.ராஜா, விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 261 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்.18</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் , கீழ்க்கண்ட பணிகள் செய்து முடிக்க 21.03.2023 ம் தேதி வரப்பெற்ற இருஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 13 ல் உள்ள சமுதாய நலக்கூடத்தில் மேம்பாடு செய்யும் பணி மதிப்பீடு ரூ. 7.90/- இலட்சம் | திரு. கே.ராஜா<br>காளிபார்விளை<br>டாணா விக்கிரமசிங்கபுரம் | 0.30 %<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திரு. வெங்கட் பெருமாள் சுப்பையா<br>ஒப்பந்தகாரர்<br>திருமாள்நகர், பெருமாள்புரம் | 0.99 %<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா, விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 262 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்.19</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் , கீழ்க்கண்ட பணிகள் செய்து முடிக்க 21.03.2023 ம் தேதி வரப்பெற்ற இருஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி தலையணை, பொதிகையடி, டாணா, வம்பளந்தான் பாறை, ஒட்டன்குளம் மற்றும் பழைய பாபநாசம் சாலை உரக்கினற்றில் உள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்யும் பணி மதிப்பீடு ரூ. 4.95/- இலட்சம் | முருகன் எலக்ட்ரிக்கல்ஸ்<br>ஒப்பந்தக்காரர்<br>கல்லிடைக்குறிச்சி | 0.10 %<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திரு. கே.ராஜா<br>காளிபார்விளை<br>டாணா விக்கிரமசிங்கபுரம் | 1.00 %<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் முருகன் எலக்ட்ரிக்கல்ஸ் ,ஒப்பந்தக்காரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 263 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்.20</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் , கீழ்க்கண்ட பணிகள் செய்து முடிக்க 23.03.2023 ம் தேதி வரப்பெற்ற இருஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பொதிகையடி துாய நீரேற்று நிலையம், கொட்டாரம் மேல் நிலை நீர்தேக்க தொட்டி, ஒட்டன்குளம் மற்றும் வம்பளந்தான் பாறை சம்பில் உள்ள Liquid Chlorination Plant¡F Liquid Chlorination சப்ளை செய்யும் பணி மதிப்பீடு ரூ. 4.50/- இலட்சம் | எக்ஸலண்ட் கோளரோ ஸிஸ்டம்<br>சப்ளையர்<br>சங்கரன் கோவில் | 1.70 %<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திரு. நிஷார்<br>ஒப்பந்தக்காரர்<br>சங்கரன் கோவில் | 0.34 %<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

அலுவலகக்குறிப்பு

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் எக்ஸலண்ட் கோளரோ ஸிஸ்டம் ,ஓப்பந்தக்காரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதி வழுங்கலாம்

**தீர்மான எண் : 264 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.21**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில், இந்நகராட்சி பேரூராட்சியாக இருந்த போது 01.04.2003 அன்று குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத்தொகைகள் உயர்த்தப்பட்டு, அதே கட்டணங்கள் தற்போது நடைமுறையில் நாளது தேதி வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியின் குடிநீர் திட்டத்தின் கீழ் பொது பராமரிப்பு செலவினம், குடிநீர் திட்டப்பணியாளர்களின் சம்பள செலவினம்,மின் கட்டணம் போன்ற அனைத்து செலவினங்களும் குடிநீர் திட்ட வருவாயில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகர் பகுதியில் உள்ள குடிநீர் நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டர்களின் இயக்க செலவுகள்மற்றும் அதற்கான மின் கட்டணம் சுமார் 2.00 கோடி வரை நிலுவையாக உள்ளது. இந்நகர் பகுதிகளில் உள்ள 21 வார்டு களுக்கும் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தற்போது அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் ரூ-29.51 கோடி மதிப்பீட்டு செலவில், குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் முடிவடையும் பட்சத்தில் இந்நகர் பகுதிக்குள் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் செய்ய இயலும். அதே சமயத்தில் அத்திட்டத்திற்கு இந்நகராட்சியில் இருந்து பங்குத் தொகையாக ரூ. 5.91 கோடி கொடுக்கப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட நிதி சுமைகளை கருத்திற் கொண்டு, நகராட்சியின் மூலம் பொது மக்களுக்கு நாள்தோறும் விநியோகம் செய்யும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறும் தனியார் இணைப்புதாரர்களிடமிருந்து 01.10.2023 முதல் கீழ்க்கண்டவாறு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகைகளை உயர்த்தி வசூல் செய்யவும், தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் உபவிதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளவும், சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு

| குடிநீர் விநியோகம் துணைவிதிகள் தற்போதைய நிலை | குடிநீர் விநியோகம் துணைவிதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டியது. |
|---|---|
| வீட்டு உபயோகம் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ. 3000/-<br>வீட்டு உபயோகமற்ற வியாபார நோக்கு இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ. 6000/-<br>தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ. 8000/- | வீட்டு உபயோகம் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ. 6000/-<br>வீட்டு உபயோகமற்ற வியாபார நோக்கு இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ. 12000/-<br>தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ. 16000/- |
| அளவுமானி மூலம் குடுமப பயனாளிகளுக்கு வழங்கப்படும் குடிநீர் மாதம் ஒன்றுக்கு 10000 லிட்டர் வரை குடிநீர் கட்டணம் ரூ.50/-ம் அதற்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீருக்கு 1000 லிட்டர் அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ. 5/- வீதம் வசூலிக்கப்படும் | குடும்ப பயனாளிகள் (வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு) மாதம் ஒன்றுக்கு அனைத்து வீட்டு உபயோக இணைப்புகளுக்கு ஓரே மாதிரியான கட்டணம் ரூ., 150/- மட்டும் வசூலிக்கப்படும் |
| குடும்ப காரியங்கள் அல்லாத தொழிற்சாலை மற்றும் | குடும்ப காரியங்கள் அல்லாத தொழிற்சாலை மற்றும் |

| | |
|---|---|
| வணிக காரியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10000 லிட்டர் வரை குடிநீர் கட்டணம் ரூ. 100/-, 10000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ. 10/- வீதம் வசூலிக்கப்படும் | வணிக காரியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு அனைத்து பிற உபயோக இணைப்புகளுக்கு ஒரே மாதிரியான கட்டணம் ரூ. 220/- வீதம் வசூலிக்கப்படும். |

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் குடிநீர் நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டர்களின் இயக்க செலவுகள்மற்றும் அதற்கான மின் கட்டணம் சுமார் 2.00 கோடி வரை நிலுவையாக உள்ளது, மேலும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் ரூ-29.51 கோடி மதிப்பீட்டு செலவில், குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேற்கண்ட திட்டத்திற்கு நகராட்சி பங்குத்தொகையாக ரூ. 5.91 கோடி செலுத்த ப்பட வேண்டியுள்ளது. மேலும் நகராட்சி குடிநீர் திட்டப்பிரிவில் உள்ள இயக்கம் மற்றும் பராமரிப்பு மற்றும் குடிநீர் திட்டப்பணியாளர்களின் ஊதியம் போன்ற நிதிச்சுமைகளை கருத்திற் கொண்டும், கடந்த 01.04.2003 பேரூராட்சி காலத்தில் உயர்த்தப்பட்டதற்கு பிறகு சுமார் 20 ஆண்டுகளமாக நகராட்சி குடிநீர் கட்டணம் உயர்த்தப்படவில்லைஎன்பதாலும். தற்போது நகராட்சி பகுதிகளில் 24 மணிநேரமும் குடிநீர் செய்யப்படவுள்ளது என்பதாலும்,, நடைமுறையில் உள்ள குடிநீர் உபவிதியில் திருத்தம் செய்யப்பட்டு நகர்பகுதியில் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டணம்உயர்த்தி வசூல் செய்யதிடவும், மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 265 / ஏற்கனவே நடைமுறையில் உள்ள உபவிதிகளில்,கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் மேற்கொள்ள மன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது.**

**வைப்புத் தொகை வீட்டு உபயோக இணைப்பிற்கு – ரூ. 6000/–**

**வைப்புத் தொகை பிற உபயோக இணைப்பிற்கு – ரூ. 12000/–**

**குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு வீட்டு உபயோக இணைப்பிற்கு ரூ. 110/– காவும், வியாபார நோக்கம் மற்றும் வணிக உபயோக இணைப்பிற்கு ரூ. 220/ – காவும் உயர்வு செய்யலாம். மேலும் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் மேம்பாட்டு செய்யும் பணி நடைபெற்று வருவதால், மேற்கண்ட திட்டத்தின் கீழ் பணி முழுமையாக முடிவுற்று 24 ஓ 7 என்ற அடிப்படையில் குடிநீர் வழங்கிய பின் குடிநீர் கட்டணத்தை மேற்கண்டவாறு உயர்வு செய்திடலாம்.**

<u>பொருள் எண்.22</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 15 வாய்கால் ரோடு மிகவும் குறுகளாகவும், ஒருப்பக்கம் வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் உள்ளதால், அப்பாதையில் செல்லும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளகுவதுடன், கால்வாயில் சென்று விழக்கூடிய சூழல் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட சலையில் பொது மக்களின் நலன் கருதி, வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் ஒட்டி தடுப்பு சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு த் தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொது மக்கள் நலன் மற்றும் வாகன ஓட்டுனர்களின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு மேற்கண்ட தடுப்பு சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில்(2023-24) இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 266 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.23**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட இரண்டு இடங்களில், பொது மக்கள் நலன் கருதி, கோடைமேலழகியான் கால்வாயில், படித்துறை அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

1. பொதிகையடி வடக்குத் தெரு பகுதி – ரூ. 10.00 இலட்சம்
2. மீனாட்சிபுரம் வாய்கால் அருகே - ரூ. 10.00 இலட்சம்

**அலுவலகக்குறிப்பு**

பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் படித்துறை அமைக்கவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்..

**தீர்மான எண் : 267 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.24**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 19 பன்னிமாடசாமி கோவில் தெருவில் உள்ள சாலை மிகவும் சிதிலம்டைந்த நிலையில் உள்ளதால், மேற்கண்ட பகுதியில் உள்ள பொது மக்கள் வந்த செல்ல சிரமப்படுகின்றனர்.எனவே மேற்கண்ட பகுதியில் புதியதாக பேவர் பிளாக் சாலை மற்றும் வாறுகால் அமைக்கும் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.7 .00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சிபொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு** பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் சிதிலமடைந்த சாலை மற்றும் வாறுகாலினை சரி செய்யும் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 268 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.25**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கும்போது தெருவிலுள்ள சாலைகளை தோண்டும் நேர்வில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் தொகையினை சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 748/08/குவ2 நாள் 21.09.2009 ல் 5 % உயர்த்த அறிவுரை வழங்கி உள்ளார்கள்.எனவே ஏற்கனவே உள்ள 2022-23 ம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டண தொகையில் 5 % உயர்த்தி 2023-24 ஆண்டிற்கு உயர்த்தி வசூல் செய்திட மன்றத்திள் அனுமதிக்கு

| நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் | கருங்கல் சாலை ரூ | தார்சாலை ரூ | சிமெண்ட்சாலை / பேவர்பிளாக் சாலை ரூ |
|---|---|---|---|
| 0 முதல் 30 மீட்டர் நீளத்திற்கு 2022–23 | 1986 | 4248 | 4909 |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2023–24 | 2085 | 4460 | 5154 |
| 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு 2022–23 | 3114 | 5377 | 6031 |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2023–24 | 3270 | 5646 | 6333 |

**அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின் படி, சாலை பராமரிப்பு கட்டணம் உயர்த்தி வசூல் செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 269 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

ஒம்/- திரு,மா.செல்வசுரேஷ்பெருமாள்

நர்மன்றத்தலைவர்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

This document was created with the Win2PDF "Print to PDF" printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/